මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF PUBLIC SECURITY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுறுபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. DRP/OP/02/School/05
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.01.17

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

பிரிவெனாதிபதி / அதிபர்

.............................................

**<u>2024/2025 வருடங்களில் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம்</u>**

கடந்த ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம் வெற்றியடைய நீங்கள் தந்த ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன். அத்துடன் கடந்த முறை காணப்பட்ட குறைபாடுகளை , தவறுகளை குறைத்துக்கொண்டு இம்முறையும் பாடசாலை மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை காலதாமதமின்றி வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

02. 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 3(2) பிரிவின் பிரகாரம் க.பொ.த (சா/த) மாணவர்கள் கல்வி பயிலும் சகல அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்களும் , பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதிகளும் "சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்களாக" நியமிக்கப்பட்டுள்ளதால், தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பான பணிகளை முறையாக நிறைவேற்றுவது உங்கள் பொறுப்பு ஆகும். சான்றுறுதிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றி பாடசாலை மாணவர்களுக்கு சிரமமின்றி தேசிய அடையாள அட்டைகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் கடமையினை ஈடேற்றுவது மட்டுமன்றி நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள மாணவ சமுதாயத்திற்காக தமது கடமையினை நிறைவேற்றும்படி நினைவுபடுத்த விரும்புகிறேன்.

03. 2016 ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் (திருத்த) சட்டத்தின் 05(2) பிரிவின்படி இலங்கையின் குடியுரிமை பெற்ற மற்றும் **<u>15 வயதினை பூர்த்தி செய்யும் / செய்த</u>** சகல இலங்கை பிரஜைகளும் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாவர். அதன்படி 2025ஆம் ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதனால் தங்கள் பாடசாலை / பிரிவெனாவில் கல்வி பயிலும் **<u>2025ஆம் ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் 2009.02.01ஆந் திகதி முதல் 2010.01.31ஆம் திகதி வரையான குறித்த காலப்பகுதியினுள் பிறந்த அனைத்து மாணவர்களினதும் விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து 2024.03.31ஆம் திகதிக்கு முன்னர் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மாகாண காரியாலயங்களுக்கு அல்லது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.</u>** மேலும், 2024ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள **2008.02.01 முதல் 2009.01.31 திகதி வரை பிறந்த இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத** மாணவர்களின் விண்ணப்பங்களை விரைவில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், இதன் மூலம் 16வயதை எட்டியவுடன் செலுத்த வேண்டிய உரிய காலத்திற்குள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதனால் அறவிடப்படும் தாமதக்கட்டணம் செலுத்துவதை இது தவிர்க்கும்.

| பாடசாலை / பிரிவெனா அமைந்துள்ள மாகாணம் | வட மாகாணம் | கிழக்கு மாகாணம் | வட மேல் மாகாணம் | தென் மாகாணம் | வடக்கு, கிழக்கு, வட மேல், தென் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்கள் |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி | உதவி ஆணையாளர், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள வட மாகாண காரியாலயம், மாவட்ட செயலகம், வவுனியா. | பிரதி ஆணையாளர், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள கிழக்கு மாகாண காரியாலயம், மட்டக்களப்பு. | பிரதி ஆணையாளர், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள வட மேல் மாகாண காரியாலயம், 3ஆம் மாடி, 'புதிய சந்தை கட்டிட தொகுதி, குருணாகல். | உதவி ஆணையாளர், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள தென் மாகாண காரியாலயம், கடவத்சதர பிரதேச செயலகம், காலி. | ஆணையாளர் நாயகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், 10ம் மாடி, சுஹுறுபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை. |

දුරකථන / தொலைபேசி / Telephone (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web www.drp.gov.lk

04. பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் வெற்றியளிப்பதற்கு கீழ் வரும் நடைமுறையினை பின்பற்றுமாறு மேலும் தெரிவிக்கின்றேன்.

I. பதிவு செய்யப்படுவதற்காக ஆ.ப.தி.வி 1,7,8 விண்ணப்பப்படிவத்தின் மூலம் மாத்திரமே விண்ணப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் பாடசாலை / பிரிவெனாவிற்கு தேவையான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களிலும் , ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் அல்லது மாகாண காரியாலயங்களினூடாக மற்றும் www.drp.gov.lk என்ற திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு சென்று பதிவிறக்கம் செய்து கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

II. எல்லா விண்ணப்பப்படிவத்திலும் துரித பதில் குறியீட்டினை (QR Code) ஒட்டுவதன் மூலம் செல்லுபடியாக்குதல் வேண்டும். இந்த துரித பதில் குறியீடு (QR Code) பாடசாலை / பிரிவெனா அமைந்துள்ள பிரதேசங்களின் பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அதில் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் QR குறியீட்டு பத்திரம், **QR குறியீடு 50 சோடிகள்** அடங்கியுள்ளதுடன் இந்த QR சோடியில் ஒன்று விண்ணப்பப்படிவத்திற்கு பயன்படுத்த வேண்டும். இங்கே QR சோடியில் ஒன்று விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படவேண்டுமென்பதுடன் மற்றைய QR குறியீடு விண்ணப்பதாரருக்கு வழங்கும் பகுதியில் (விண்ணப்பப்படிவத்தின் 3ஆம் பகுதி) ஒட்டப்பட்டு விண்ணப்பதாரருக்கு கையளிக்க வேண்டும். **விண்ணப்பங்கள் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு இது அவசியமாகும்**. ( துரித பதில் குறியீடு (QR Code) பாவனை மற்றும் சேமிப்பகம் தொடர்பாக தங்களுக்கு வழங்கப்பட்ட எனது DRP/OP/01/New.App./43ஆம் இலக்க 2016.02.23ஆம் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். )

III. சகல விண்ணப்பத்தின் முதற்பக்கத்தில் இடது பக்க மேற்பகுதியில் **பாடசாலையின் பெயர் , தொலைபேசி எண்** என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். (விண்ணப்பத்தில் ஏற்படும் குறைபாடுகளை உடனடியாக தெரியப்படுத்த இது அவசியமாகும்.)

IV. விண்ணப்பப்படிவத்தின் முதற்பக்கத்தில் "மாவட்டம்", "பிரதேச செயலக பிரிவு" மற்றும் "கிராம உத்தியோகத்தர் இலக்கமும் பிரிவு" ஆகியவற்றை கட்டாயம் குறிப்பிடப்படுவதுடன் அங்கே குறிப்பிடப்படுவது **விண்ணப்பதாரரின் நிரந்தர முகவரிக்குரிய மாவட்டம் , பிரதேச செயலக பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் இலக்கம் மற்றும் பிரிவு என்பன ஆகும்.** ஒருபோதும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் தொடர்பான விபரங்களை இதன் கீழ் குறிப்பிடக் கூடாது.

V. விண்ணப்பப்படிவமானது தெளிவான எழுத்தில் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

பெயர் -
விண்ணப்பதாரர் மூலம் பிறப்புச்சான்றிதழில் 2ஆம் கூட்டிலுள்ள பெயர் முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக குடும்பப்பெயர் மற்றும் தகப்பனுடைய பெயரின் பின்னால் வழங்கப்பட்டுள்ள சிறப்புப்பெயர் (Sur Name) **விண்ணப்பதாருடைய விருப்பத்திற்கினங்க** பயன்படுத்துவதற்கு முடியும்.

உ+தா :-

| | |
|---|---|
| பிறப்புச்சான்றிதழின் இரண்டாம் கூட்டினுலுள்ள பெயர் | : கசுன் சமீர |
| தகப்பனின் பெயர் | : சிறிபாலகே சரத் குமார பெரேரா |
| வழங்க முடியுமான பெயர் | : கசுன் சமீர |
| | : சிறிபாலகே கசுன் சமீர |
| | : சிறிபாலகே கசுன் சமீர பெரேரா |
| | : கசுன் சமீர பெரேரா |

பெயரினை குறிப்பிடும் போது விண்ணப்பதாரரின் தாய்மொழியில் (சிங்களம் அல்லது தமிழ்) விண்ணப்பத்தின் முதலாம் பக்கத்தில் 1ம் இலக்க கூட்டினுள்ளும் மற்றும் ஆங்கில மொழியில் 2ம் கூட்டினுள்ளும் குறிப்பிடப்பட வேண்டும். இங்கே விண்ணப்பதாரர் ஆங்கில மொழியில் பெயரினை எழுதுவதற்கு எழுத்து உச்சரிப்பின்படி விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். ஆங்கில மொழியில் பெயர் குறிப்பிடாத விண்ணப்பத்தாரர்களுக்காக வழங்கப்பட்டிருக்கும் பெயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது ஏற்படும் எழுத்துப்பிழை உடைய அடையாள அட்டை விநியோகிக்கப்பட்ட பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது. **ஆகையால், ஆங்கில மொழியில் சரியான பெயரினை குறிப்பிடுவது கட்டாயமாகும்.**

முகவரி -
பாடசாலை / பிரிவெனாவில் உள்ள தகவலின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட முகவரியைப் பயன்படுத்த வேண்டும், அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் கிராம உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழின் மூலமாகவோ அல்லது இதனுடன் இணைக்கப்பட்ட படிவத்தின் மூலமாகவோ (இணைப்பு I) முகவரி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முகவரியினை குறிப்பிடும் போது விண்ணப்பதாரியின் தாய்மொழியில் ( சிங்களம் அல்லது தமிழ் ) மற்றும் ஆங்கில மொழி உட்பட இரண்டு மொழிகளிலும் சரியான முழு முகவரியைக் குறிப்பிட வேண்டும். தேசிய அடையாள அட்டை விபரங்கள் மும்மொழிகளிலும் அச்சிடப்படுவதனால் தகவல்களை சரியாக உட்செலுத்துவதற்காக இது அவசியமாக கருதப்படுகிறது. மேலும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியின் முகவரியாக பாடசாலை முகவரியை அதில் குறிப்பிடுவதை தவிர்த்தல் வேண்டும்

VI. விண்ணப்பப்படிவத்தின் மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 11இல் "விசாரணைகளுக்காக தேவைப்படுத்தப்படும் விபரங்கள்" என்ற பகுதியில் விண்ணப்பதாரியின் அல்லது விண்ணப்பதாரியின் பெற்றோரின் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும். (விண்ணப்பதாரியிடம் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் உடனடியாக தொடர்பு கொள்ள இது அவசியம்)

VII. விண்ணப்பப்படிவத்துடன் மேலதிக மாவட்ட பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரரின் பிறப்பு சான்றிதழின் தெளிவான மூலப்பிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழில் பெயர் / பிறந்த திகதி, பிறந்த இடம் ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும். அம்மூலப்பிரதியானது மீண்டும் விண்ணப்பதாரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படமாட்டாது. மேலும் முதல் தடவையாக பிறப்பைப் பதிவு செய்யும் முகமாக குறித்த வைத்தியசாலையின் பதிவாளர் அல்லது கிராமிய பதிவாளர் மூலமாக வழங்கப்படும் " இலவசப் பிரதி " அல்லது பிரித்து எடுக்கப்பட்ட குறிப்பு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தரவுத்தளத்தில் உட்படுத்தப்பட்டிருக்கும் பிறப்புச் சான்றிதழின் தகவல்கள் வேறுபடும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் அண்மையில் பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

VIII. விண்ணப்பதாரர் பிற நாடொன்றில் பிறந்தவராயின் அப்பிறப்பு இலங்கை குடியுரிமைச் சட்டத்தின் 5(2) பிரிவின்படி பதிவு செய்யப்பட்டு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட குடியுரிமை சான்றிதழின் நிழற்பிரதி மூலப் பிரதியுடன் ஒப்பு நோக்கி அதிபரினால் / பிரிவெனாதிபதியினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும். (எச்சந்தர்ப்பத்திலும் இச் சான்றிதழின் மூலப்பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் தவிர்க்கப்பட வேண்டும்)

IX. தேசிய அடையாள அட்டைக்காக பெற்றுக்கொள்ளப்படும் புகைப்படம் தொடர்பாக உரிய புகைப்பட நிலையம் மூலமாக வழங்கும் விண்ணப்பதாரர்களுடைய புகைப்படம் உள்ளடங்கிய பற்றுச்சீட்டில் புகைப்பட நிலைய உரிமையாளர் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதிபர் / பிரிவெனாதிபதி முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பமிட்டதன் பிற்பாடு அதிபர் / பிரிவெனாதிபதி அதில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ முத்திரையினை இடுதல் வேண்டும். புகைப்படம் 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். **அத்துடன் விண்ணப்பதாரருக்கு ஏதேனும் இயலாமையால் அவதிப்பட்டால் அது தொடர்பாக அதிபர் / பிரிவெனாதிபதி மூலம் புகைப்படத்துடன் கூடிய பற்றுச்சீட்டில் விண்ணப்பதாரருடைய அங்கவீனம் தொடர்பான நிலைமையைக் குறிப்பிட்டு சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

X. விண்ணப்பதாரரின் மூலம் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பம் இடப்படல் வேண்டும். விண்ணப்பதாரருடைய கையொப்பம் உரிய மாணவர் மூலமே இடப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தேசிய அடையாள அட்டையில் அச்சிடப்படுவதனால் விண்ணப்பத்தின் 4ஆம் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கூட்டினுள் எந்த கோடுகளையும் தொடாதவாறும் பெட்டியினுள்ள மேல்,கீழ் கோடுகளுக்கு சமாந்திரமாகவும் இடப்படுவதுடன் **தெளிவான கறுப்பு நிற பேனையினை** பாவித்து கையொப்பம் இடப்படுதல் வேண்டும். கடந்த ஆண்டுகளில் பாடசலை விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப்படிவத்தில் ஒரு மொழியிலும் புகைப்பட பற்றுச்சீட்டில் மற்றொரு மொழியிலும் கையெழுத்திடப்பட்டதை அவதானிக்க முடிந்தது ஆகையால் விண்ணப்பதாரரின் கையொப்பம் **எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.**

XI. சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் என்ற வகையில் அதிபர் / பிரிவெனாதிபதி மூலம் விண்ணப்பப்படிவத்தின் 4ஆம் பக்கத்தில் குறித்த இடத்தில் தன்னுடைய பெயரை எழுதி, கையொப்பம் இடப்பட்டு, அலுவலக முத்திரையை தெளிவாக பதித்தல் வேண்டும். **வாசிக்க முடியாத , தெளிவற்ற மற்றும் நிறக்குறைவான பதவி முத்திரையை பதித்தல் விண்ணப்பப்படிவமானது நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

XII. முதற்தடவையாக தேசிய அடையாள அட்டையினை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான **விண்ணப்பக் கட்டணம் ரூபா 200/= ஆகும்**. மேலும் தேசிய அடையாள அட்டையை பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு தற்போது பொருந்தும் கட்டணமாக ரூ.120/- செலுத்த வேண்டும். அதன்படி **மொத்தக்கட்டணமாக ரூ.320/-(200+120)** ஆகும். அக்கட்டணம் செலுத்தும் போது எனது இலக்க DRP/OP/01/Charges-Amm/33(volume II)ஆம் இலக்க 2022.10.18ஆம் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

XIII. **தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை உரிய காலத்திற்குள் (15வயதை எட்டிய நாளிலிருந்து 16வயதை அடையும் வரையிலான ஒரு வருட காலம்) சமர்ப்பிக்காத குற்றத்தைத் தீர்ப்பதற்கு ரூ.2500 தண்டப்பணம் செலுத்த வேண்டும். அதற்காக பூரணப்படுத்தப்பட்ட ஆ.ப.தி/இ/02/03/ii என்ற மாதிரிப்படிவம் மற்றும் ரூ.2500 பணத்தினை *தீவின் எந்தவொரு* பிரதேச செயலகத்திற்கு *உரிய விண்ணப்பதாரருடைய பெயரில்* செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.**

- நிர்ணயிக்கப்பட்ட வயதிற்குள் (15வயதை எட்டிய நாளிலிருந்து 16வயதை அடையும் வரையிலான ஒரு வருட காலம்) தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதன் மூலம் மேற்கண்ட தண்டப்பணத்தினை செலுத்துவதை தவிர்க்கலாம்.

- *சில விண்ணப்பதாரர்களுடைய 16 வயது பூரணமடையும் திகதிக்கு முதல் அதிபர் மூலம் அடையாள அட்டை விண்ணப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருந்தால் அது உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் என கருதப்படுவதுடன் அதற்காக தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது.*

XIV. கட்டணம் செலுத்துதல் மற்றும் சரிபார்ப்பதற்காக விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும் போது, ஆ.ப.தி/இ/பி/14 படிவம் 03 பிரதிகளாக பூர்த்தி செய்து, ஒரு பிரதியை பிரதேச செயலகத்தின் அடையாளப் பிரிவிற்கு கொடுப்பதற்கும், இரண்டாவது பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து இத்திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டுமென்பதுடன் மூன்றாவது பிரதியை விசாரணைகள் மற்றும் பரீட்சிப்பதற்காகவும் உங்களிடத்தில் இருத்தல் வேண்டும்.

XV. பாடசாலை மாணவர்களின் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் அது தொடர்பில் **0115226100** என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக நிர்வாக உத்தியோகத்தர் (இயக்கம்) அல்லது பாடசாலை விண்ணப்பங்கள் ஒருங்கிணைப்பு அலுவலருடன் (தொலைபேசி இல **011-2862985**) தொடர்பை ஏற்படுத்தும்படி தயவுடன் தெரிவிக்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு www.drp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்

06. மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி தங்கள் பாடசாலையில் / பிரிவெனாவில் இதுவரையிலும் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு விண்ணப்பிக்காத அனைத்து மாணவர்களினதும் விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி 2024.03.31ஆம் திகதிக்கு முன்னர் மேலே இல 03ம் பந்தியில் உள்ளவாறு ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள மாகாண காரியாலயங்களுக்கோ அல்லது பிரதான காரியாலத்திற்கோ அனுப்பி வைக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன். அத்தோடு காலந்தாழ்த்தாமல் விண்ணப்பங்களை அனுப்புவதன் மூலம் மாத்திரமே உரிய நேரத்தில் பாடசாலை / பிரிவெனா மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்க முடியுமென்பதனை மீளவும் நினைவூட்ட விரும்புகின்றேன்.

07. இச் செயன்முறைகள் வெற்றியடைவது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன்.

ஜீ.பிரதீப் சபுதந்திரி
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 01. | செயலாளர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | - தெ.கொ. |
| 02. | செயலாளர், கல்வி அமைச்சு | - தெ.கொ. |
| 03. | செயலாளர், மாகாண கல்வி அமைச்சு | - தெ.கொ. |
| 04. | சகல மாவட்டச் செயலாளர்கள் | - தெ.கொ. |
| 05. | பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம் | - தெ.கொ. |
| 06. | சகல பிரதேச செயலாளர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |
| 07. | சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |
| 08. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |
| 09. | சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |
| 10. | ஆ.ப.தி.மாகாண உதவி ஆணையாளர்கள் | - தெ.கொ. |
| 11. | சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |
| 12. | பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆ.ப.தி. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | - தெ.கொ. மற்றும் உ.ந |

ஆ.ப.தி./இ/02/3/ii

**<u>குறித்த காலப் பகுதிக்குள் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் அதற்காக விண்ணப்பிக்காமைக்கான வெளிப்படுத்துகை</u>**

மாவட்டம் :- ............................................ பாடசாலை பெயர் :-....................................................

விண்ணப்பப்படிவ இலக்கம் :-...................................................

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-..............................................................................................................
2. முகவரி :-.............................................................................................................................................

   ..........................................................................................................................................................
3. பிறந்த திகதி :-.......................................................................................................................................
4. இது வரை குறித்த காலப் பகுதிக்குள் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளாமைக்கான காரணம்
   - பிறப்பு அத்தாட்சி பத்திரம் / உத்தேச வயதுச் சான்றிதழ் அல்லது பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ் இல்லாமை.
   - 16 வயது பூர்த்தியடைந்த பின்னரும் நீண்ட காலம் வெளிநாட்டில் வசித்தமை
   - காலதாமதமாக இலங்கைக் குடியுரிமையினைப் பெற்றமை.

   வேறு காரணங்கள் :- ...........................................................................................................

   ..........................................................................................................................................
5. ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 16 ஆம் பிரிவுக்கு அமைய குறிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளுவதிலிருந்து விலகுதல் சட்டத்திலிருந்து 44(1)அ பிரிவின்படி குற்றம் என்பதுடன் அக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக குறிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதற்கு சம்மதிக்கிறேன் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.
6. இதற்கு முன்னர் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பித்தும் இதுவரை அதற்கான தேசிய அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளாவிடின்.

   I. விண்ணப்பப்படிவத்தின் இல. ..........................................................................

   II. பிரதேச செயலக பிரிவு. ..................................................................................

   III. மாவட்டம். ......................................................................................................

   IV. விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட திகதி. ................................................

மேலே என்னால் குறிப்பிடப்பட்ட காரணங்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன்.

வெளிப்படுத்தும் இடம் ............................................................ திகதி ..................................................

..............................................................

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

மேற்குறித்த குற்றத்திற்காக ரூ..................... கட்டணம் குற்றத்திலிருந்து விடுவிப்பதற்காக சிபாரிசு செய்து அனுமதிக்காக சமர்ப்பிக்கின்றேன்.

திகதி .................................................... ..........................................................................

**அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்**

மேலே குறிப்பிடப்பட்ட சிபாரிசை அனுமதிக்கின்றேன்.

திகதி .................................................... ..........................................................................

**ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்**

**பாடசாலை விண்ணப்பதாரர்களுக்காக தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குரிய வதிவிடம் தொடர்பான உறுதிப்படுத்தல்**

1. மாவட்டம் :-.................................... 2. பிரதேச செயலக பிரிவு :-....................................
3. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் :- ..........................................................................
4. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுப்பெயர் :-..........................................................................
5. பிறந்த திகதி :-......................................
6. முகவரி :- ..........................................................................................................................................

   ..........................................................................................................................................
7. பாடசாலையின் பெயர் :- ..........................................................................................................

வேறு காரணங்கள் ..........................................................................................................................................

மேற்கண்ட தகவல் சரியானது என்றும் இந்த விண்ணப்பதாரர் மேற்கண்ட முகவரியில் வசிப்பவர் என்றும் சான்றளிக்கிறேன்.

............................................. .............................................

கிராம அலுவலர் கையொப்பம் மற்றும் திகதி கிராம அலுவலர் பெயர் மற்றும் அதிகாரப்பூர்வ முத்திரை

---

**பாடசாலை விண்ணப்பதாரர்களுக்காக தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குரிய வதிவிடம் தொடர்பான உறுதிப்படுத்தல்**

1. மாவட்டம் :-.................................... 2. பிரதேச செயலக பிரிவு :-....................................
3. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் :- ..........................................................................
4. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுப்பெயர் :-..........................................................................
5. பிறந்த திகதி :-......................................
6. முகவரி :- ..........................................................................................................................................

   ..........................................................................................................................................
7. பாடசாலையின் பெயர் :- ..........................................................................................................

வேறு காரணங்கள் ..........................................................................................................................................

மேற்கண்ட தகவல் சரியானது என்றும் இந்த விண்ணப்பதாரர் மேற்கண்ட முகவரியில் வசிப்பவர் என்றும் சான்றளிக்கிறேன்.

............................................. .............................................

கிராம அலுவலர் கையொப்பம் மற்றும் திகதி கிராம அலுவலர் பெயர் மற்றும் அதிகாரப்பூர்வ முத்திரை

(பாடசாலை / பிரிவெனா மூலம் மூன்று பிரதிகளாக பூரணப்படுத்தப்பட வேண்டும்)

**ஆ.ப.தி/இ/பி/14**

**மாதிரி இல 14**

## பாடசாலை / பிரிவெனா விண்ணப்பங்களை பாரங்கொடுக்கும் ஆவணம்

மாவட்டம் :- ....................................................................................................

பிரதேச செயலகம் :- ....................................................................................................

பாடசாலை / பிரிவெனா பெயர் :- ....................................................................................................

திகதி :- ....................................................................................................

| தொடர் இல | QR ஸ்டிகர் இலக்கம் | விண்ணப்பதாரருடைய பெயர் | பிறந்த திகதி | அறவிடப்படும் கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | விண்ணப்பக் கட்டணம் | பற்றுச்சீட்டு இல | தண்டப் பணம் | பற்றுச்சீட்டு இல |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை :........... முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறைகளின் அளவு:.........

**மேலே உள்ள தகவல்கள் சரியானவை என்று சான்றளிக்கிறேன்.**

............................................... திகதி: ................................

அதிபர் / பி.அதிபர் / பிரிவெனாதிபதி கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

**சரி பார்க்கப்பட்டது:-**

................................
அபிவிருத்தி உத்தியோகத்தரின் பெயர் மற்றும் கையொப்பம் திகதி: .................................

**பரீட்சிக்கப்பட்ட பின்னர் மீண்டும் பாரமேற்றல்**

...............................................
பாரமேற்ற உத்தியோகத்தரின் பெயர் மற்றும் கையொப்பம் திகதி: ...........................